**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 90/2024**

2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய முகமது அம்ஜத் **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 10.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : முகமது அம்ஜத் | | |
| Father /Husband Name | : முகமது இக்பால் | Court | : |
| Village | : ஆக்கூர் மடப்புரம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 51/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| **எண்.** | **தேதி** | **ஆவணங்களின் விபரங்கள்** |
|---|---|---|
| 1 | 15.04.2024 | வாதி பெயரில் உள்ள கிரய சாசனத்தின் அசல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 18.11.2024 | வாதி பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | -- | தாவா சொத்திற்கான புல வரைபடத்தின் கணினி நகல் **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 17.12.2024 | 01.01.2024 முதல் 16.12.2024 வரையிலான வில்லங்க சான்றின் கணினி நகல் **வாசாஆ 4**ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.